## இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - 2017

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானங்கள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் மற்றும் 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 ஜூலை 19 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை நிதி அறிக்கை சமர்ப்பித்தல் நியமம் 4

நியமத்தின் 15 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம், அனைத்து அறிக்கை சமர்பித்தல் காலப்பகுதி இறுதியிலும் அங்கு இனங்காணப்பட்ட காப்புறுதி பொறுப்புக்கள் போதியளவினதாக உள்ளதா என அங்கு காப்புறுதி உடன்படிக்கைகளின் கீழ் காணப்படும் எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய மதிப்பீட்டை பயன்படுத்துவதன் மூலம் காப்புறுதியாளர் ஒருவரால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏற்றுமதியாளருக்கு வழங்கியிருந்த உச்ச மட்ட பொறுப்பு வரையறைகளில் பயன்படுத்தியிருந்த பொறுப்பு எல்லை ரூபா 6,517,011,842 தொகை ஆக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒதுக்கம் ரூபா 175,838,112 தொகையாக காணப்பட்டதுடன் நியமத்தின் பிரகாரம் காப்புறுதிப் பொறுப்பு போதியளவானதாக உள்ளனவா என பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95,000,000 தொகைக்கான கட்டிடம் 2009 ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமதி மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 41 ஆம் பந்தியின் பிரகாரம், மீள்மதிப்பீட்டு மிகையில் இருந்து ஒரு தொகை நிறுவனத்தினால் அந்த சொத்துக்கள் பயன்படுத்தும் போது பிடித்து வைத்த உழைப்பிற்கு மாற்ற முடியுமெனினும் அவ்வாறு மாற்றப்பட்ட மிகையின் தொகையாளவது, சொத்துக்ளின் மீள்மதிப்பீடு தாங்கக் கூடிய பெறுமதி மீது அடிப்படையான பெறுமானத்தேய்வு இடையே உள்ள வித்தியாசமாகும். எனினும், அதற்கு இணங்காத வகையில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில்

வருடாந்த பெறுமானத் தேய்வு என பதிவழிக்கப்பட்ட பெறுமதிக்கு சமமான ரூபா 8,428,409 இற்கான பெறுதியொன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் இருந்து பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 21

---

நியமத்தின் 28 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதி விடயங்கள் மாற்றப்பட்ட செலாவணி விகிதாசாரத்திற்கு மாற்றமான வித்தியாசமான விகிதாசாரத்தில் மாற்றப்பட்டமையால் ஏற்பட்ட வெளிநாட்டு செலாவணி வித்தியாசத்தை அக்காலப்பகுதியில் இலாப அல்லது நட்டத்திற்கு சீராக்கல் செய்ய வேண்டும். எனினும், கூட்டுத்தாபனத்தினால் வெளிநாட்டு நாணயத்தினால் பேணப்பட்டு வரும் நிதி சொத்துக்கள் ஐந்தொகை தினத்தில் காணப்படும் செலாவணி விகிதாசாரத்திற்கு மாற்றுவதன் மூலம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏற்பட்டிருந்த ரூபா 150,586,830 தொகைக்கான வித்தியாசங்கள் வெளிநாட்டு செலாவணி சமப்படுத்தும் (Exchange Equalisation) நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

---

கூட்டுத்தாபனத்தினால் 2017 ஜுன் 07 திகதி ரூபா 295,676,664 இற்கான கிரயமொன்று மற்றும் முகப் பெறுமதி ரூபா 310,169,000 தொகைக்கான பிணைமுறி ஒன்று ரூபா 314,800,133 தொகைக்கு விற்பனை செய்திருந்ததுடன் அது மொத்த திறைசேரி பிணைமுறி முதலீட்டில் 52 சதவீதமாக இருந்தது. நியமத்தின் 09 பந்தியின் பிரகாரம் ''நிறுவனம் ஒன்று இந்த நிதி ஆண்டின் போது அல்லது அதற்கு முன்னைய நிதியாண்டின் போது, முதிர்வடையும் வரை பிடித்து வைத்துள்ள கவனம் செலுத்தாதிருக்கக்கூடிய அளவினை விடக் கூடிய அளவு ஒன்று முதிர்வு அடைய முன்னர் விற்பனை செய்து அல்லது மீண்டும் வகைப்படுத்தியிருந்தால் நிறுவனத்தினால் நிதி ஏதேனும் சொத்துக்களை முதிர்வு அடையும் வரை பிடித்து வைத்துள்ள நிதி சொத்துக்கள் என வகைப்படுத்தக் கூடாது'' என காட்டியிருந்த போதிலும் முதிர்வடைவதற்கு முன்னர் மேற்கொண்டிருந்த அந்த முதலீட்டு பகுதியை விற்பனை செய்த பின்னர் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 4 தனியார் கம்பனிகளில் இருந்து 3 வருட காலத்தை மிகைத்த காலம் முதல் ரூபா 48,265 இற்கான கடன் மீதி அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் 5 வருடத்திற்கு மிகையான காலம் முதல் காணப்படும் 2 மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 336,500 தொகை தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2010 செப்டம்பர் 24 திகதிய 08/2010 ஆம் இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானம் | ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் உச்சமட்ட கடன் எல்லையின் மீது உறுதிக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும், மூன்று ஏற்றுமதியாளர்களுக்கு காப்புறுதி உறுதி வழங்கும் போது உரிய கட்டணத்தை மிகைத்து ரூபா 22,500 தொகை உறுதிக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவு ரூபா 200,363,537 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் மிகை ரூபா 156,111,575 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 356,475,112 தொகை எனப்படும் 228 சதவீதத்திற்கான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது காப்புறுதி நட்டஈடுக்கான செலவுகள் ரூபா 456,165,353 என்படும் 518 சதவீத்தில் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 163,411,762 ஆக காணப்பட்ட மிகை 2015 ஆண்டளவில் ரூபா 199,076,131 தொகை வரை இடையறாது அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆண்டு முதல் படிப்படியாக குறைவடைந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 200,363,537 இற்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கம் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 231,115,321 இற்கான பங்களிப்பு ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு பின்னைய ஆண்டுகளின் போது அந்த பங்களிப்பு வருடாந்தம் தளம்பல் அடைந்திருந்தது. மேலும், 2016 ஆண்டு வரையான பங்களிப்பு தொகை நேர் பெறுமதி ஒன்றினை கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 146,050,561 இற்கான மறை பங்களிப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு ரூபா 238,085,213 தொகை மொத்த தவணை வருமானத்தில் ரூபா 213,195,140 தொகை எனப்படும் 90 சதவீதம் ஆகிய ஏற்றுமதி கொடுப்பனவு காப்புறுதி உறுதி வருமானமாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 58,988,550 தொகை எனப்படும் 28 சதவீதம் ஏற்றுமதியாளர் ஒருவரிடம் கிடைத்திருந்தது. மேலும் கூடிய பங்களிப்பின் பெற்றுக்கொடுக்கும் 23 ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதிக் கொடுப்பனவு காப்புறுதி உறுதி வருமானத்தில் ரூபா 124,680,768 தொகை எனப்படும் 59 சதவீத பங்களிப்பினை வழங்கியிருந்ததுடன் ரூபா 29,416,949 தொகை எனப்படும் 13 சதவீத வருமானம் ஏனைய 91 ஏற்றுமதியாளர்களிடம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மொத்த ஏற்றுமதியாளர்களில் 79 சதவீத பங்களிப்பு 13 சதவீதம் ஆகக் காணப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் நீடிப்பு மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்காக ஏற்றுமதியாளர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் அலுவல்கள் பகிரங்கப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல் காலத்திற்கு பொருத்தமானது என அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கம் கொண்ட பொது முயற்சிச் சுற்றறிக்கையின் பிரிவு 5:1 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் இறுதியாக 2010 ஆண்டு வரையான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சாதாரண வழமையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டுமெனினும், 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2017 மார்ச் 22 திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் 2017 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம் ரூபா 19.5 மில்லியனிற்கான கணனி துனைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தொடர் பெறுகைகள் அலுவல்கள் 2017 ஆகஸ்ட் மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் திட்டத்தின் பிரகாரம் பெறுகை விடயங்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

#### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தை தாபித்ததன் குறிக்கோள்களிடையே பின்வரும் குறிக்கோள்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(i) வெளிநாடுகளில் விற்பனை ஆய்வுகள், விளம்பரப்படுத்தல் மற்றும் ஏனைய மேம்படுத்தல் தன்மையின் நடவடிக்கைகள் ஏதும் ஏற்றுக்கொள்ளும் போது மேற்கொள்வதற்கு நேரிடக் கூடிய நட்டங்கள் தொடர்பாக ஏற்றுமதியாளர்களுக்கு பிணை ஏற்பாடு செய்தல்.

(ii) இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்தவை முன்னேற்றுவதற்காக வெளிநாடுகளில் விற்பனை ஆய்வு அலுவல்கள் ஏற்றுக்கொள்ளல், ஏற்றுமதியை முன்னேற்றும் பல்வேறு பகுதிகள் தொடர்பாக கலந்துரையாடல்கள், பாடநெறிகள் நடாத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் இயலுமை போலவே சந்தைப்படுத்தல் நடைமுறை தொடர்பான தகவல்கள் சேகரித்து விளம்பரப்படுத்தல்

(iii) ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கு மற்றும் ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கு புதிய சந்தைகள் கண்டுபிடித்து அவர்களின் பண்டங்களை வெளிநாடுகளில் போட்டி அடிப்படையாக கொடுப்பனவு நிபந்தனைகளின் பிரகாரம் விற்பனை செய்வதற்கும் ஏற்றுமதி செய்வோருக்கு உதவுதல்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் காட்டப்பட்டிருந்த 06 பிரதான புகையிரத நிலையங்களில் CPA (Cost Passonger Airfram) பெயர் பலகைகளை பொருத்துதல், காலாண்டு செய்தி சஞ்சிகை ஒன்று வெளியிடுதல், ஒட்டுமொத்த வீடியோ நாடா ஒன்று அபிவிருத்தி செய்தல், ஏற்றுமதிக் கடன் காப்புறுதி தொடர்பாக நட்டஈட்டு கைநூல் ஒன்று தயாரித்தல் 2017 – 2020 காலப்பகுதிக்காக புதிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்தல், கூடிய காப்புறுதி ஆபத்துடனான வெளிநாட்டு கொள்வனவாளர்களை சந்தித்து அவர்களின் வியாபார நிலைமை தொடர்பாக மேற்பார்வை செய்தல், புதிய ஏற்றுமதியாளர்கள் தொடர்பாக ஏற்றுமதிக் கடன் பாதுகாப்பை அபிவிருத்தி செய்தல், அமைப்பு கட்டமைப்பு தயாரித்தல் மற்றும் தொழில் நியமக் குறியீடு அபிவிருத்தி செய்தல் மற்றும் ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா 15 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த தகவல் தொழிநுட்ப இரண்டு கருமங்களை செயற்படுத்துதல் ஆகிய கருமங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விடயங்களின் முன்னேற்றம் மீளாய்வுக்காக முறையான நடைமுறை ஒன்று செயற்படுத்தியிருக்காததுடன் நிதி முன்னேற்றம் மாத்திரம் மாதாந்தம் மதிப்பாய்விற்கு ஆளாக்கப்பட்டுள்ளது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 இன் 15 இலக்க ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் நாணயச் சபையினால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் பணிப்பாளர் சபையில் அடங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நாணயச் சபையினால் பெண் அலுவலர் ஒருவரை நியமனம் செய்திருந்த போதிலும், அப் பெண் அலுவலர் 2016 செப்டம்பர் 28 திகதியின் பின்னர் பணிப்பாளர் சபை கூட்டம் ஒன்றிலும் பங்குபற்றியிருக்காததுடன், அதற்கு பதிலாக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தரும் 2017 ஆண்டின் போது 3 கூட்டங்களுக்கு மாத்திரம் பங்குபற்றியிருந்தார். அதன் பிரகாரம், 2017 ஆண்டின் போது பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 12 நடாத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 07 கூட்டங்கள் மத்திய வங்கியை பிரதிநிதிப்படுத்தும் உத்தியோகத்தர் இன்றியே நடாத்தப்பட்டுள்ளது.

(ஆ) வர்த்தக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சில் உத்தியோத்தர் ஒருவர் என 2015 ஏப்ரல் 07 திகதி, பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 2016 திசெம்பர் 18 திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த போதிலும் அவர் ஓய்வு பெற்ற பின்னரும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 04 இல் பங்குபற்றியிருந்தார்.

(இ) ஆறு ஏற்றுமதியாளர்களுக்காக அங்கீகரித்திருந்த உச்ச பொறுப்பு எல்லை (Maximum Liability Limit) ரூபா 680,000,000 தொகை காணப்பட்ட போதிலும் ஏற்றுமதியாளர்களின் கொள்வனவாளர்களுக்கான அங்கீகரிக்கப்பட்டிருந்த பொறுப்பு வரையரைகளில் (Buyer Liability Limit) கூட்டுத்தொகை ரூபா 2,421,395,000 தொகையாகக் காணப்பட்டதால் ஏற்றுமதியாளர்களின் உச்சமட்ட பொறுப்பு வரையறையை மிகைத்து கொள்வனவாளர்களுக்கு ரூபா 1,741,395,000 இற்கான பொறுப்பு வரையரை அனுமதிக்கப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் அறிவிக்கும் முகவராண்மையின் மூலம் கொள்வனவுகள் தொடர்பாக விதந்துரைக்கப்பட்ட அபிப்பிராயம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை தொடர்பாக போலவே மத்திய கிழக்கு நாடுகளில் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளில் காணப்பட்ட நிலையற்ற தன்மை தொடர்பாகவும் கூட்டுத்தாபனம் போதியளவு கவனம் ஒன்று செலுத்தாமை மற்றும் கொள்வனவாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் போது குறிப்பிட்ட வியாபார நிறுவனத்தின் நிதி உறுதித் தன்மை தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொள்ளாமல் கொள்வனவாளருக்கு கடன் வரையறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2017 ஆண்டின் போது ஈரான் நாட்டு கொள்வனவாளர் ஒருவர் தொடர்பாக ஏற்றுமதியாளர்கள் இருவருக்கு கூட்டுத்தொகை ரூபா 69,641,971 இற்கான நட்டஈட்டுத்தொகை செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) ஐக்கிய அரசு குடியரசின் கொள்வனவாளர் ஒருவருக்கு கடன் வரையரை அனுமதிக்கும் போது பிணையுடனான சிறிய கடன் தொகை ஒன்று வழங்குவதற்கு தர அறிக்கையின் பிரகாரம் விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அந்த விதப்புரைகள் மற்றும் கொள்வனவாளர் தொடர்பாக காணப்பட்ட வேறு பிரதிகூலமான தகவல்கள் மீது போதியளவு கவனம் ஒன்று செலுத்தப்படாமல் கடன் வரையறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 6 மாதம் போன்ற குறுகிய காலத்தில் கொள்வனவாளர் வங்கரோத்து அடைந்திருந்ததுடன் 2017 நவம்பர் 21 திகதி ஏற்றுமதியாளருக்கு ரூபா 13,125,826 இற்கான நட்டஈட்டுத் தொகையொன்று செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேரிட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்கள் சமர்பித்திருக்காத புதிதாக வியாபாரம் ஆரம்பிக்கப்பட்ட ரஷ்ய கொள்வனவாளர் இருவரின் தர அறிக்கையின் காணப்பட்ட பிரதிகூலமான நிலைமை தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தாமையால் கடன் எல்லை அங்கீகரித்திருந்தமையால் ஏற்றுமதியாளர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 45,821,592 இற்கான நட்டஈட்டுத் தொகை ஒன்று மீளாய்வாண்டின் போது செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(ஈ) தெரிவு பரிசோதனைகளின் பிரகாரம் கொள்வனவாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடன் வரையறைகளில் காப்புறுதி உறுதியின் மூலம் அணவல் செய்யப்படும் 60 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்றுமதியாளர்களின் பாதுகாப்புத் தன்மையை போலவே கொள்வனவாளர்களுக்கு கடன் வரையறை அங்கீகரித்தல் முறையான நடைமுறை ஒன்றில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ள நேரிடும் நட்டஈட்டு செலவுகளை குறைத்து கூட்டுத்தாபனத்தின் நீடித்து இருத்தலில் என மேலும் கவனம் செலுத்த வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

(உ) கொள்வனவாளர்களினால் ஏற்றுமதியாளர்களுக்காக செலுத்த வேண்டிய பணம் செலுத்தாமையால் ஏற்றுமதியாளர்களுக்கு காப்புறுதி நட்டஈடு செலுத்திய பின்னர் குறிப்பிட்ட வெளிநாட்டு கொள்வனவாளர்களின் அந்த பணத்தை அறவீடு செய்வதற்காக மற்றும் கொள்வனவாளர்கள் பிற்காலத்தில் ஏற்றுமதியாளருக்கு பணம் செலுத்தியுள்ளாரா என கண்டுபிடிப்பதற்காக பொருத்தமான நடைமுறை ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

ஏற்றுமதியாளர் ஒருவருடன் தொடர்பாக ரஷ்ய கொடுக்கல் வாங்கல்கள்தாரர் ஒருவர் தொடர்பாக கடன் அறிக்கை முகவர் நிலையம் அவர்களின் அறிக்கையில் முறையான பிணை மீது 130,000 யூரோக்கள் அதாவது ரூபா 22,000,000 இற்கான கடன் வரையரையொன்று 2014 ஆகஸ்ட் 21 திகதி விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2014 ஆகஸ்ட் 28 திகதி அந்த கொள்வனவாளருக்கு ரூபா 60,000,000 இற்கான பொறுப்பு வரையறை ஒன்று அங்கீகரிக்கப்பட்டு பின்னர் அந்த வரையறையை ரூபா 650,000,000 தொகை வரை அதாவது 984 சதவீதத்தினால் பணிப்பாளர் சபையின் அணவல் அங்கீகாரத்துடன் அதிகரித்திருந்தது. எனினும் அச் சந்தர்ப்பத்தில் ரஷ்யாவில் காணப்பட்ட பொருளாதார நிலைமை தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமல் கூட்டுத்தாபனத்தினால் கடன் எல்லை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட ஏற்றுமதியாளர்களுக்கு வரலாற்றில் செலுத்துவதற்கு நேரிட்டிருந்த பாரிய நட்டஈட்டுத்தொகை ஆகிய ரூபா 374,507,710 தொகை செலுத்த நேரிட்டிருந்தது. மேலும், இந்த கடன் வரையரையினை அதிகரிக்கும் போது அத்திகதிக்கு முன்னர் அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்த அனைத்து கடன் வரையரைகள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதா என்பது தொடர்பாக கணக்காய்விற்கு சான்றுகள் சமர்பிக்கப்படவில்லை.

**4.5 பதவியணி நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 செப்டம்பர் 24 திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் டீஎம்எஸ்/ஈ4/30/4/201/1 இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 56 மற்றும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 37 ஆக காணப்பட்டமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 19 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.3 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டிருநக்காத 15 வருடங்களை விடக் கூடிய சேவை அனுபவம் உள்ள தகைமைகளை உடைய உத்தியோகத்தர்களுக்கும் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக பதவி உயர்வு பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.

(இ) முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றினை கடைபிடிக்காமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் அங்கீகாரம் பெற்றிருக்காத முகாமைத்துவ பயிற்றப்பட்ட பதவி ஒன்றிற்காக 2017 ஜனவரி 02 ஆம் திகதி பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 360,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் அங்கீகாரம் பெற்றிருக்காத பதவியொன்றான உதவி முகாமையாளர் பதவிக்கு அந்த பெண் உத்தியோகத்தர் 2018 ஜனவரி 02 திகதி முதல் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை சேர்ந்த சந்தைப்படுத்தும் நிறைவேற்றுனர் பதவிக்காக செய்தித்தாள் அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் சேர்க்கப்பட்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் 2017 மார்ச் 02 திகதி நடைபெற்ற 03/2017 ஆம் இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நியமனக் கடிதம் வழங்கும் போது சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர் பதவிக்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத முகாமைத்துவ பயிற்றப்பட்ட பதவிகள் என பதவி பெயரை மாற்றி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் நிலைத்திருத்தலுக்காக முக்கியத்துவமான பிரதிப் பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ சந்தைப்படுத்தல் இரண்டு பதவிகளும் 2009 ஆண்டு முதல் 2017 ஆண்டு இறுதி வரை வெற்றிடமாக காணப்பட்டதுடன் தாபனக் கோவையின் 11 அத்தியாயத்தின் 13.2 மற்றும் 13.3 பந்திகளுக்கு முரணாக அந்த 02 பதவிகளுக்காக நீண்டகால அடிப்படையில் பதில் கடமைக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்து மீளாய்வாண்டில் மாத்திரம் பதில் கடமை சம்பளமாக முறையே ரூபா 270,000 தொகை மற்றும் ரூபா 109,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பதவிகள் வெற்றிடமாக காணப்படல் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் அலுவல்கள் மீது மற்றும் கூட்டுத்தாபனத்தின் நீடித்தலுக்கும் பிரதிகூலமாகக் கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்று காணப்படாததுடன் தனியார் கணக்காய்வு கம்பனி ஒன்றினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்

2017 ஆகஸ்ட் 14 திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 இலக்கம் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்திருக்கவில்லை. அதன் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தி பிரகாரம் கணக்கு அறிக்கைகள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஆண்டிற்கான பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் 2018 மே 14 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளமையால் புதிய தலைவர் ஒருவர் நியமனம் செய்தல் தாமதித்தல் அதற்கான காரணமாகியிருந்தது.

### 6.2 பெறுகைகள்

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,177,700 கிரயத்தை உடைய Hardware firewall முறையொன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.11.3 இன் பிரகாரம் பெறுகைகள் குழுக் கூட்டத்தின் அறிக்கைகள் குறிப்பிட்ட படிவத்தில் (Standard Format) தயாரித்தல், வழிகாட்டல் 2.12 இன் பிரகாரம் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்

குழுவின் அங்கத்தவர்களினால் அக்குழுக்களின் முதலாவது கூட்டத்திலும் தமது கையொப்பத்தை வெளிப்படுத்தல் (Sign Declaration) வழங்குதல் மற்றும் கூறுவிலைகள் திறத்தல் தொடர்பாக குறிப்பிட்ட விண்ணப்பம் பயன்படுத்துதல் மேற்கொண்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே 29 சதவீதம் முதல் 444 சத வீதம் வரையான வீச்சுக்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பாதீட்டுக்கு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.4 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் கணக்கு ஆண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டுமெனினும், 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான வருடாந்த அறிக்கைகள் 2017 ஆண்டு இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் மற்றும் 2016 ஆண்டிற்கான அறிக்கை 2018 ஜூலை மாதம் வரை சபையில் சமர்பித்திருக்காமையால் அவ் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலில் நீண்ட தாமதம் ஒன்று காணப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வெளிநாட்டு கொள்வனவாளர்கள் மதிப்பாய்வு செய்யும் நடைமுறை | தர அறிக்கை மதிப்பாய்வு செய்யும் போது மற்றும் கடன் எல்லை தீர்மானிக்கும் போது போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை. |
| (ஆ) | ஊழியர் நிருவாகம் | ஊழியர் சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு அலுவல்கள் முறைசார் விதமாக காணப்படாமை. |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | செயல் நடவடிக்கைத் திட்ட இலக்குகளை நெருங்காமை. |
| (ஈ) | ஆவணங்கள் பேணல் | சொத்துக்களில் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. |